**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.149/2025 | அரசுதரப்பு சாட்சி | P.W.9 |
| பெயர் | நளினி (காவல் ஆய்வாளர்) | கிராமம் | |
| தந்தை பெயர் | | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 27.07.2026 As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhar card of the Witness verified.
எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.
சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் மங்கலமேடு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2025ம் தேதியில் நான் புதுக்கோட்டை கணேஷ்நகர் காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளராக பணிபுரிந்த போது வல்லாத்திரக்கோட்டை காவல்நிலைய குற்ற எண் 16/2025 பிஎன்எஸ் பிரிவுகள் 281, 125(a)ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட ராஜேந்திரன் என்பவர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதால் 281, 125(a), 106(1) பிஎன்எஸ் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்த நிலையில் உதவி ஆய்வாளர் கூத்தபெருமாள் வழக்கை அவருடைய புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள்பாண்டி, ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். காவல் நிலையத்தில் ஆஜர்

ஆன எதிரியை வழக்கின் காரணம் கூறி கைது செய்து பிணையில் விடுவித்துள்ளார். 14.02.2025ம் தேதியில் வழக்கை என்னுடைய புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று இறந்து போன ராஜேந்திரன் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அதற்காக நான் தயார் செய்த பிரேதவிசாரணை அறிக்கை அசா.ஆ.9. சாட்சிகள் ஆனந்தி, நித்யா, நாகர்ஜீன், பாண்டிச்செல்வி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி கிருஷ்டின் ராஜா என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 15.03.2025ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் நல்லதம்பி என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றேன். பிரேதபரிசோதனை மேற்கொண்டு மருத்துவர் ஆனந்தராம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதிக்கு மருத்துவசிகிச்சை அளித்த மருத்துவர் ஜான்சுந்தர்சிங் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். காவலர் தினேஷ்குமார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கூத்தபெருமாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நடந்த இடத்தின் அருகில் உள்ள கேஸ் கம்பெனியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் அது சம்பவ இடத்தில் இருந்து சற்று தொலைவில் இருந்தது. அந்த கேஸ் கம்பெனியின் ஊழியர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை. அந்த ரோடு அவ்வப்போது வாகனங்கள் சென்று வரும்

சாலைதான். ரோட்டிற்கு நடுவில் தடுப்பு கட்டை எதுவும் அமைந்திருக்கவில்லை. இறந்து போன ராஜேந்திரனுக்கு மிகவும் வேண்டிய நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி வாகனத்தை மெதுவாகத்தான் ஓட்டிவந்தார் என்று சொன்னாலும் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த கிருஷ்ணராஜாவின் கவனக்குறைவு காரணமாகவே இந்த விபத்து நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய கிருஷ்ணராஜா என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. எதிரிக்கும் இந்த விபத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/–நளினி (காவல் ஆய்வாளர்)

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**